முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வரதரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.06.2019, சனிக்கிழமை

1. **தன்னார்வ தொண்டு வளர்த்து**
   **தரணியோர் தயவுடன் வாழ்ந்திட**
   **அண்ணலாக ஆறுமுக சக்தியாக**
   **அருட்குருவாக வந்தருளும் ஞானியே**
2. ஞானியே உன்பெருமை கூறியே
   ஞாலமதில் நித்ய பிரசன்ன ஆசி
   இனிமைபட விகாரி விடை திங்கள்
   இருபானை திகதி காரி வாரம்
   (விகாரி வருடம் வைகாசி மாதம் 25ம் நாள் 08.06.2019, சனிக்கிழமை)
3. வாரமதில் வரதரிஷி யானும்
   வழங்கிடுவேன் உலகோர் நலம்பெற
   சோரமிலா ஞான உலகம் அமைய
   சுத்தநெறி ஒன்றே உயர் வழியாகும்
4. ஆகவே அரங்கன் ஞானவழியை
   அகிலத்தார் ஏற்று வருக
   வகைபட எங்கும் மக்களிடை
   வள்ளல் நெறி பரவச் செய்து
5. செய்துமே அரங்கன் தொண்டர்கள்
   சிறப்பாக கடமை ஆற்றிட
   மெய்யுடன் உலகம் எங்கும்
   முழுமை ஞானம் மக்கள் அடைய
6. அடையவே தரும பலம் கூடிட
   அறம்தனை வளர்த்து வருவதுடன்
   தடையற தயவு பெருகும்படி
   தட்டாது அரங்கஞானி கண்டு
7. கண்டு ஆசிபெற்று வர
   கணக்காய் ஞானிகள் பேரில்
   தொண்டு எங்கும் பெருக்கி
   தொடர் சேவை ஆற்றி வருக
8. வருகவே கலியுகம் தானும்
   வளம் பெறும் வல்லமை பெறும்
   முருகா எனும் செபதபம் எங்கும்
   முழங்கவே மாற்றம் காணும்
9. காணவே தமிழகம் தொட்டு
   கந்தவேலன் மாற்றமதை
   ஞான தேசிகனை கொண்டு
   ஞான வழிகளில் செய்து வர

10. வருகவே அற்புதம் நடத்தும்
வருகவே வளர்ச்சி காணும்
மாறுதலும் மாண்புகளும் நிகழ
மாதவசி செய்யும் தருமம்

11. தருமம் அளவுகோலாய் இருக்க
தரணியோர் தருமம் வளர்த்தாலே
முருகன் ஆளுமை சடுதி வரும்
முழுமைபட ஞான ஆட்சி மலரும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் வரதரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலகமக்கள் எல்லாம் தன்னார்வமாய் தொண்டுகளைச் செய்து அவரவருள்ளும் தயவு உணர்வு பெருகி தயவுடைய மக்களாய் வாழ்ந்து கடைத்தேறிடவே மக்களை வழிநடத்திட வேண்டி முருகப்பெருமானின் அவதாரமாக அண்ணலாக அருட்குருவாக வந்துதித்த மகாஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக்கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 25ம் நாள் 08.06.2019 சனிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே வரதரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வரதரிஷி.

குற்றமற்ற ஞானஉலகமாக இந்த கலியுகம் மாற்றி அமைக்கவே உலகினில் அரங்கரின் தூய நெறியினை கடைபிடிப்பது ஒன்றே உயர் வழிமுறையாகும். ஆகவே ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறுகின்ற ஞானவழிகளை உலக மக்கள் எல்லாம் ஏற்று முழுமனதாய் நம்பிக்கையோடு கடைப்பிடித்து வருமாறு செய்தும் மக்கள் எல்லாம் வள்ளல் தன்மை பெற்றிட வள்ளல் பெருமானாரின் ஜீவகாருண்ய நெறியினை பரப்பியும் அரங்கனின் தொண்டர்கள் எல்லாம் இப்பணிகளை செவ்வனே செய்து சிறப்புடன் கடமைகளை செய்திட்டால் உலகமெங்கும் ஜீவதயவும், ஞானமும் பெருகி உலகனில் தருமபலம் பெருகிடும்.

உலக மக்கள் எல்லாம் ஜீவதயவுடன் தருமபலம் பெருக்கி அறத்தினை வளர்த்து வருவதுடன் அவரெல்லாம் தருமத்தின் தலைவன் ஞானபண்டிதனின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரைக் கண்டு பயபக்தியுடன் வணங்கி அருளாசிகளைப் பெற்று அரங்கரைப் பின் தொடர்ந்து தொண்டுகளைச் செய்து வருவதுடன் உலக மக்களுக்கு அரங்கரின் புகழையும் பரப்பி வரவேண்டும். இவ்விதமே செயல்பட கலியுகமும் வளம் பெறும் வல்லமை பெறும். உலகமெங்கும் முருகா முருகா முருகா என்றே முருகப்பெருமானின் திருநாமங்களின் ஒலி பெருகிட உலகம் மாற்றம் காணுமப்பா.

உலகமாற்றத்தினை ஞானத்தலைவன் ஞானபண்டிதன் முருகப்பெருமானும் தென்னகமாம் தமிழகத்தில் இருந்து துவங்கிட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக பலவிதமான ஞானவழிகளிலே அற்புதமாய் மாற்றங்களை செய்து வருகின்றார். ஆதலினால் இனி வரும் காலமெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக ஆறுமுகனாரின் சக்தி வெளிப்பட்டு உலகினில் அற்புதங்கள் நடந்திடும் உலகம் பெரும் வளர்ச்சி காணும்.

மாற்றங்களுக்கு அரங்கன் செய்யும் தருமமே அளவுகோலாய் இருப்பதினாலே அரங்கனின் தருமம் வளர வளர உலகப் பெருமாற்றம் விரைந்து உலகினில் உண்டாகும் எனக்கூறுகிறார் மகான் வரதரிஷி.

–சுபம்–